கடலாடி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்: திருமதி. முனைவர். வெ. பாண்டிமாதேவி, எம்.எஸ்ஸி., பி.எட்., பி.எச்.டி.,

ந.க. எண். 629/அ2/2019 நாள்: 09.02.2023

பொருள்: கல்லூரிக் கல்வித் துறை- தமிழ்நாடு அமைச்சுப் பணி- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தொகுதி IV- 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018- ஆண்டுக்கான தெரிவு- நேரடி நியமனம் - திருமதி. மு. வீரசெல்வி என்பவர் தட்டச்சராகப் பணியில் சேர்ந்தது- பணிவரன்முறை செய்வது தொடர்பாக

பார்வை:
1)சென்னை கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 7882/பி1/2019 நாள்:28.02.2019
2)தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய தெரிவுக் கடிதம் எண்.4692/PSD-A/2018 நாள்:22.12.2018
3)சென்னை, பாரதி மகளிர் கல்லூரி, முதல்வரின் செயல்முறைகள் ந.க.எண். 337/எப்/2019 நாள்: 04.03.2019
4) சென்னை, பாரதி மகளிர் கல்லூரி, முதல்வரின் செயல்முறைகள் ந.க.எண். 340/எப்/2019 நாள்: 18.03.2019
5)சென்னை கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 7882/பி1/2019 நாள்:10.03.2020
6)சென்னை கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 7882/பி1/2019 நாள்:27.01.2023

\- \- \-

ஆணை:-

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 2015-2016, 2016-2017. 2017-2018ஆம் ஆண்டுகளுக்கான தொகுதி-IV தேர்வில் தெரிவு செய்யப்பட்டு தட்டச்சராகப் பணிபுரிய இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 1-ல் காணும் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறையின்படி கல்லூரிக்கு பணிநியமன ஒதுக்கீடு செய்யப்பட்டது. பார்வை 3-ல் காணும் செயல்முறைகளின்படி பணிநியமன ஆணை வழங்கப்பட்டதையடுத்து திருமதி. மு. வீரசெல்வி என்பவர் சென்னை, பாரதி மகளிர் கல்லூரியில் தட்டச்சராக 11.03.2019 முற்பகல் பணியில் சேர்ந்து, தொடர்ந்து பணிபுரிந்து வந்துள்ள நிலையில், பணியிடமாறுதல் வழங்கப்பட்டதையடுத்து கடலாடி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தட்டச்சராக தற்பொழுது பணிபுரிந்து வருகின்றார்.

பார்வை 5-ல் காணும் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் கடிதத்தில் (வரிசை எண் 30) திருமதி. எம். வீரசெல்வி என்பவரால் சமர்ப்பிக்கப்பட்ட சாதிச் சான்றிதழ் குறித்து மாவட்ட விழிப்புணர்வு குழுவிடமிருந்து (District Vigilance Committee) சாதிச் சான்றிதழின் மெய்த் தன்மை குறித்த அறிக்கை பெற்றவுடன் பணிவரன்முறை செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

தற்பொழுது பார்வை 6-இல் காணும் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் கடிதத்தில் பத்தி 3-இல் இராமநாதபுரம் மாவட்ட விழிக்கண் குழுவிடமிருந்து பெறப்பட்ட செயல்முறைகளில் திருமதி. மு. வீரசெல்வி என்பவருக்கு இராமநாதபுரம் மாவட்டம் துணை வட்டாட்சியரால் வழங்கப்பட்ட சாதிச்சான்று (சான்றிதழ் எண் 1115139 நாள்:28.04.2009) மெய்த்தன்மை உடையது எனக் கருதி குழு முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த.பி.பா.)

மேலும் பத்தி 4-ல் குறிப்பிட்டுள்ளவாறு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய செயலரின் கடிதத்திற்கிணங்க கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளவாறு திருமதி. மு. வீரசெல்வி என்வரின் பணியினை தட்டச்சராக பணியில் சேர்ந்த **11.03.2019** முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

மேலும் "இப்பணிவரன்முறை தொகுதி-IV (2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018) பணிநியமனம் தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் நிலுவையில் உள்ள வழக்குகளில் வழங்கப்படவுள்ள இறுதி தீர்ப்பாணைக்குட்பட்டது" என்ற நிபந்தனையின் அடிப்படையில் இவ்வாணை வழங்கப்படுகிறது.

5.2.2023

முதல்வர்
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
கடலாடி

09/02/2023

பெறுநர்: திருமதி. மு. வீரசெல்வி, தட்டச்சர்,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கடலாடி

நகல்:கல்லூரிக் கல்வி இயக்குநர், கல்லூரிக் கல்வி இயக்ககம், சென்னை
அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.